Registered as a News Paper பக்கங்கள் 4 விலை ரூபா: 5-00

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 25 [08 - 3 - 1993] திங்கட்கிழமை ஓசை 18

## வடக்கில் படை நடவடிக்கை அடுத்த வாரம் ஆரம்பம்

வடபகுதியில் 3000 படையினர் பங்குபற்றும் பாரியஇராணுவ நடவடிக்கை ஒன்று அடுத்தவாரம் எடுக்கப்படவுள்ளதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை விஸ்தரிப்பதே இந்த தாக்குதலின் நோக்கமாக இருக்கும் எனவும் இது புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து குடாநாடு முழுவதையும் கைப்பற்றும் நோக்குடன் எடுக்கப்படுவதல்ல என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனினும் இந்த நடவடிக்கை எங்கு ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதைகூற அந்த இராணுவஅதிகாரி மறுத்துவிட்டார்.

# 'தமிழீழப் பெண்களின் விடுதலைப் போராட்டம் எமது இயக்கம் பிறப்பித்த அக்கினிக் குழந்தை'

இன்று அனைத்துலக மகளிர் தினம். உலகப் பெண்ணினத்தின் எழுச்சி தினமாகிய இப்புரட்சி நாள் தமிழீழமெங்கும் கொண்டாடப் படுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எமது சமூகம் மாறிக்கொண்டிருக்கிறது விடுதலைப் போராக வீசிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் புயல் எமது மண்ணில் காலம்காலமாக நிலைத்திருந்த பழைமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்திவருகிறது எமது மனக்குகையில் குடியிருந்த மூடநம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக் கருத்துலகில் புதியபார்வை மலர்கிறது. புதிய விழிப்புணர்வு தோன்றி வருகிறது. சமூக உறவுகளில் புரட்சிகரமான மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாகப் பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புற்று வருகிறது. பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில்பிறந்த அக்கினிக்குழந்தை. அதன் வளர்ச்சியும் எழுச்சியும் ஒப்பில்லாத ஒரு தனிச் சரித்திரம். மண்ணின் விடிவிற்காகவும், பெண்ணின் விமோசனத்திற்காகவும் இன்று தமிழீழப் புரட்சிப்பெண் புலியாக மாறிவிட்டாள். அநீதிக்கு எதிரான ஆவேச நெருப்பாக அவள் இன்று ஆயுதமேந்தி நிற்கிறாள். இந்த வரலாற்றுத் திருப்பத்திற்கு எமதுஇயக்கமே வழி சமைத்துக்கொடுத்தது.

சமத்துவத்தை நோக்கிய பயணமாக பெண் உரிமைப் போராட்டம் தொடர்கிறது. பாலியல் வேறுபாட்டின் அடிப்படையில் சமத்துவமற்ற சமூக உறவுகள் உருவாக்கம் பெற்றுள்ளன எல்லாக் காலங்களிலும், எல்லா சமூகங்களிலும், எல்லா பண்பாட்டு வடிவங்களிலும் இந்த சமத்துவமற்ற மனித உறவு நிலவி வருகிறது. பெண்ணை தாழ்ந்த நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கும் இந்த சமூக அநீதியை எதிர்த்து இன்று உலகப் பெண்ணினம் போர்க்கொடி உயர்த்தி நிற்கிறது.

பால் ரீதியான உடற்கூற்று வேறுபாடு என்பது இயற்கையின் திருவிளையாடலாக இனவிருத்திக்கு அளிக்கப்பட்ட கொடை உயிர்ப்படைப்பிற்காக சிருஷ்டிக்கப்பட்ட உடற்கூற்றின் அடிப்படையில் ஆணையும பெண்ணையும் வேறுபடுத்தி சமத்துவமற்ற உறவுகளை சமூகம் பின்னிவிட்டிருக்கிறது. பாலியல் வேறுபாடும், அதன் அடிப்படையில் தோன்றிய பண்பாட்டு நியமங்களும், அவை



(4 ஆம் பக்கம் பார்க்க)

## தீரச்செயல் புரிந்த வீரருக்கு தலைவர் பரிசும், கௌரவமும்

போர் நடவடிக்கைகளில் திறமையான செயல் புரிந்த புலிப்படை வீரர்களுக்கு தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். நேற்று மாலை நடைபெற்ற இப்பரிசளிப்பு வைபவத்தில் ஐந்து போராளிகளுக்கு அதிவிசேட பரிசில்களும் அறுபத்தொரு போராளிகளுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்பட்டன,

01-10-92இல் கட்டைக்காட்டுப்பகுதியில் அமைந்திருந்த இராணுவ மினிமுகாம் ஒன்றையும், 2½ மைல் தூரம் அமைந்திருந்த காவல் அரண்களையும் தாக்கி அழித்த சம்பவத்திற்கு திறமையாக செயற்பட்டு வேவு பார்த்தமைக்காக துரை (சிறீகாந்த்), செம்பியன் (சிவாஜி), இதயன் ஆகியோருக்கு அதிவிசேட பரிசில்களை வழங்கி தலைவர் கௌரவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் திறமையாக செயற்பட்டமைக்காக ஐம்பது போராளிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அவர்களது பெயர் விபரம் வருமாறு:

இளங்கோ, அழகன்(தாகூர்) தவனேசன், மனோகரன் (மனோ), சேரன், இளங்கதிர், செழியன் (சங்கரி), வேதமணி, சித்தார்த்தன் (சாத்திரி), இனியவன், ஆதி, வாணன், நம்பி, காந்தன், நவநீலன், எல்லாளன், நிலவன் (கெனடி), ரஞ்

( 3 ஆம் பக்கம் பார்க்க )



# தலைவரின்சமஷ்டியோசனை; பிரேமதாசா மழுப்பல்

## அரசியல் அமைப்பை மாற்றுவது சிக்கல் நிறைந்ததாம்

இனப்பிரச்சினை தீர்விற்கு சமஷ்டி அமைப்பு முறையொன்று முன்வைக்கப்பட்டால் அதனைப் பரிசீலனை செய்யத்தயார் என்ற தலைவர் பிரபாகரனின் அறிவிற்பிற்கு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா "சிறிலங்கா அரசியல் யாப்பு, சிறிலங்கா ஒருங்கிணைந்த ஒற்றையாட்சி நாடு என்பதை வலியுறுத்துகின்றது. எனவே அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டுமானால் அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு

## தலைவர் பரிசும், கௌரவமும்


போர் நடவடிக்கைகளில் திறமையான செயல் புரிந்த புலிப்படை வீரர்களுக்கு தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். நேற்று மாலை நடைபெற்ற இப்பரிசளிப்பு வைபவத்தில் ஐந்து போராளிகளுக்கு அதிவிசேட பரிசில்களும் அறுபத்தொரு போராளிகளுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்பட்டன,

01-10-92இல் கட்டைக்காட்டுப்பகுதியில் அமைந்திருந்த இராணுவ மினிமுகாம் ஒன்றையும், 2½ மைல் தூரம் அமைந்திருந்த காவல் அரண்களையும் தாக்கி அழித்த சம்பவத்திற்கு திறமையாக செயற்பட்டு வேவு பார்த்தமைக்காக துரை (சிறீகாந்த்), செம்பியன் (சிவாஜி), இதயன் ஆகியோருக்கு அதிவிசேட பரிசில்களை வழங்கி தலைவர் கௌரவித்தார்.


இந்த தாக்குதல் சம்பவத்தில் திறமையாக செயற்பட்டமைக்காக ஐம்பது போராளிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அவர்களது பெயர் விபரம் வருமாறு:

இளங்கோ, அழகன்(தாகூர்) தவனேசன், மனோகரன் (மனோ), சேரன், இளங்கதிர், செழியன் (சங்கரி), வேதமணி, சித்தார்த்தன் (சாத்திரி), இனியவன், ஆதி, வாணன், நம்பி, காந்தன், நவநீலன், எல்லாளன், நிலவன் (கெனடி), ரஞ்

( 3 ஆம் பக்கம் பார்க்க )



கிளாலி கடற் கண்ணிவெடித் தாக்குதலுக்கான சிறப்பு பரிசை தலைவர் பிரபாகரனிடமிருந்து சேரன் பெறுகின்றார். அருகில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் காணப்படுகின்றார்.



கட்டைக்காட்டு சண்டையில் தீரச் செயல் புரிந்தமைக்காக தலைவர் பிரபாகரனிடம் இருந்து செம்பியன் (சிவாஜி) விசேட பரிசில்களைப் பெறுகிறார். அருகில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் காணப்படுகின்றார்.

# பிரேமதாசா மழுப்பல்

## அரசியல் அமைப்பை மாற்றுவது சிக்கல் நிறைந்ததாம்

இனப்பிரச்சினை தீர்விற்கு சமஷ்டி அமைப்பு முறையொன்று முன்வைக்கப்பட்டால் அதனைப் பரிசீலனை செய்யத்தயார் என்ற தலைவர் பிரபாகரனின் அறிவிற்பிற்கு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ''சிறிலங்கா அரசியல் யாப்பு, சிறிலங்கா ஒருங்கிணைந்த ஒற்றையாட்சி நாடு என்பதை வலியுறுத்துகின்றது. எனவே அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டுமானால் அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் வேண்டும். பொதுசன வாக்கெடுப்பில் மக்களின் ஒப்புதல் பெரும்பான்மையாக இருக்கவேண்டும்'' என மழுப்பல் ரீதியான பதில் ஒன்றை அளித்தார்.

நேற்றிரவு தொலைபேசி மூலம் பி. பி. ஸி. நேயர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அப்பேட்டியின் விபரம் வருமாறு;

கேள்வி: விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன்அவர்கள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண சமஷ்டி அமைப்புத் திட்டத்தை இந்தத் திட்டம் தமிழர்களுக்குப் போதிய தன்னாட்சி வழங்கினால் அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கிறார். இதற்கு ஜனாதிபதியின் பதில் என்ன?

பாராளுமன்றத்தெரிவுக்குழு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு குறித்து ஆராய்ந்துவருவது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்குநன்குதெரியும். என்னுடைய அரசு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுத்துவரும் முயற்சி பற்றி உங்களுக்குத்தெரியும். சமஷ்டி அமைப்பு என்ற கருத்தும் ஆய்வுக்கு உட்பட்டுவருகிறது. பேச்சுவார்த்தைகளுக்குப் பன்னர் ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்காசுதந்திரக்கட்சிஆகியவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஏனைய மூன்று அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் தன்னாட்சிப் பகிர்வுத் திட்டத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளார்கள்போல் தெரிகிறது இந்தியா முன்வைத்த திட்டம் போன்றதொரு திட்டத்தை முன்வைத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### பூநகரிப்பாதை விவகாரம்

# ஐ. நா. அதிகாரிகள் - புலிகள் இருமணிநேர பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்துள்ள அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நேற்று பூநகரி பாதை குறித்து பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகிய இப்பேச்சுவார்த்தை சுமுகமான நிலையில் 2 மணித்தியாலங்கள் நீடித்தது. நாளை செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தைகள் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் சார்பில் டாக்டர் பீற்றர் நிக்கலசும் விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம், அரசியற்துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# இன்று அனைத்துலக மகளிர் நாள் எழுச்சி ஊர்வலம்; பொதுக்கூட்டம்

### விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக மகளிர் தினமான இன்று விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினர் எழுச்சி ஊர்வலமொன்றை ஒழுங்கு செய்துள்ளனர். இவ் எழுச்சி ஊர்வலம் மாலை 2.30 மணியளவில் கோண்டாவில் கிழக்குச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி பலாலி வீதியூடாக பல்கலைக்கழக மைதானத்தைச் சென்றடையும் எழுச்சி ஊர்வலம் பல்கலைக்கழக மைதானத்தை அடைந்ததும் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று அங்கு நடைபெறவுள்ளது.

இவ் எழுச்சி ஊர்வலத்தில் பல்வேறு மகளிர் அமைபபுகளும் பொது நிறுவனங்களும் கலந்துகொள்ள உள்ளன இவ் ஊர்வலத்தில் அலங்கார ஊர்திகள் பவனியும் இடம்பெறவுள்ளது

இவ் ஊர்வலம் செல்லவுள்ள கோண்டாவில் கிழக்குச் சந்தியிலிருந்து பலகலைக்கழக மைதனம் வரையான வீதியின் இருமருங்கும் சிவப்பு மஞ்சள் நிற கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. இடையிடையே சுலோகங்கள் அடங்கிய சிறிய பதாகைகளும். வீதிக்கு குறுக்கே மகளிர் தினத்தை அறிவிக்கும் பதாகைகளும் தொங்கவிடப்பட்டுள்ளன.

சந்திகள் மற்றும் கேந்திர இடங்களில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

## வரி விளம்பரம்

### வகுப்புகள்

தமிழ் ரைப்பிங் வார நாள், வார இறுதி வகுப்புகள் சிறந்த முறையில் நடைபெறுகின்றன SCHOOL OF BUSINESS AD MI IS RAT ON16,3rd CR-OSS STREET JAFFNA
(சி 6145)

### சேவை

றெனி மூக்குக் கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாக வழங்கப்படும். இல 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ் தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (சி-6156)

### தேவை

சிறுவர்களின் சோட்ஸ், சேட், பெண்கள் கவுண் தைக்கத் தெரிந்த பெண்கள் தேவை. இன்றே தொடர்பு கொள்ளுங்கள்: ஜெகா தையல் அகம், 729, கே. கே. எஸ். றோட், யாழ்நகர் (யாழ். இந்துக்கல்லூரிக்கு முன்பாக)
(4410)

### விற்பனைக்குண்டு

நெஷனல் M-3 வீடியோ கமரா, ரெக்னிக், ஓடியோ ஸ்பீட் டப்பிங் டெக், குளிர்பான சாலைகளில், விளையாட்டு அரங்குகளில் வைக்கக் கூடிய பெரியளவிலான T.V கேம் முதலியன விற்பனைக்கு உண்டு தொடர்பு: மனோகரன், இல. 23, B. M. C. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (4070)

★

கோல்டன்கொமற் முட்டை இடும் இளங்கோழிகள். தடுப்பு ஊசி போடப்பட்டவை. விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் (4069)

### 5-3-93 இல் சனி மாற்றம்

14-4-93 இல் செவ்வாய் மாற்றம் 1-6-93 வரை வியாழ வக்கிரகம் 1993 - 94 ஸ்ரீமுக புதுவருட பலன்களும் எண் ஜோதிடமும் அடங்கியது. ரூபா 8.50 எங்கும் விற்பனையாகின்றது. கனகா ரேடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி (நூலாசிரியர்: Prof. சத்தியதாஸன்)
(4414)

### ஊக்குவிப்பு



கிராமிய உழைப்பாளர் சங்கம் யாழ். மாவட்டம்
சிறுவர் பராமரிப்பு நிதிக்காக

## மாபெரும் நாடகக்கலைவிழா

காலம்:- 12. 03. 1993 வெள்ளிக்கிழமை இரவு 8.00மணி
இடம்:- தாவடி பத்திரகாளி ஆலய அருகாமை-
அம்பாள் விளையாட்டு மைதானம்

இந்தமண் எங்களின் சொந்தமண் புகழ்
S.G. சாந்தன் அரிச்சந்திரனாகவும்

அரியாலையூர் நடிக கலாமணி
V செல்வம் சந்திரமதியாகவும்
இணைந்து வழங்கும்

அரியாலை "கலைமகள் கலை ஒளி"
நாடக மன்றம் வழங்கும்


## அரிச்சந்திரா மயான காண்டம்

(புராண இசை நாடகம்)

(4415)



## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## கந்தையாகிருஷ்ணபிள்ளை

மலர்வு 24-08-1921 உதிர்வு 06-02-1993

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
வாழ்ந்த உங்கள் நினைவு எம்
நெஞ்சை விட்டு என்றும்
அகலாது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

35/3 கொழும்புத்துறை சாலை
சுண்டிக்குளி
-குடும்பத்தினர்
(4416)



## உனது 6-ம் உனது 2-ம்
## ஆண்டு நிறைவில்


# 3000 மாணவர்கள் தளபாடமின்றி அவதி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் சுமார் ஆறாயிரம் மாணவர்களில் மூவாயிரம் மாணவர்கள் தரையிலிருந்தே கல்வி கற்று வருகின்றார்கள்.

கப்பலில் இரண்டு தடவைகள் பருத்தித்துறை துறைமுகத்திற்கு கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டு இறக்கப்பட்ட பாடசாலை தளபாடங்களும் இம் மாணவர்களுக்கு எட்டாமல் போய் விட்டன.

கப்பலில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது தொகுதி தளபாடங்கள் இப் பகுதி பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், பின்பு இப் பகுதி பாடசாலைகளுக்குத் தளபாடங்கள் வழங்கப்படவில்லை.

வடமராட்சி கிழக்கில் தற்போது இயங்கும் 17 பாடசாலைகளில் நான்கு பாடசாலைகள் வெற்றிலைக்கேணி, இராணுவ நடவடிக்கையினால் தமது உடைமைகளை இழந்த நிலையில் அப்பகுதியில் வேறு இடங்களில் இயங்கி வருகின்றன.

ஏனைய 13 பாடசாலைகளிலும் அண்மைக்காலங்களில் அதிகளவு இடம்பெயர்ந்த மாணவர்கள் வந்து சேர்ந்துள்ளார்கள்.

இதனால் இப்பகுதியில் தளபாட பற்றாக்குறை மிக மோசமான நிலையினை அடைந்துள்ளது. [36]


நவாலி-முருகானந்த சனசமூக நிலையத்தின்

## முழுநிலா விழாவும் சர்வதேச மகளிர் தினமும்

காலம்:- 08-03-1993 இரவு 7.00 மணி
இடம்:- நவாலி முருகமூர்த்தி கோவில் வீதி.

விசேட நிகழ்ச்சி:

## பட்டி மண்டபம்

பொருள்: இன்றைய சூழ்நிலையில் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு
சட்டமா? சமயமா? அவசியமானது.

| சட்டம் | சமயம் |
| --- | --- |
| K.S. முத்துலிங்கம் | இரா. செல்வவடிவேல் |
| K. கலாதரன் | வேல்நம்பி |
| N. கணேசமூர்த்தி | பிரசாந்தன் |

நடுவர்- சி. வேலாயுதம்.
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

அன்பளிப்பு:-
BECON - யாழ்ப்பாணம்.
-செயலாளர்
(சி-6163)



## மீண்டும்......
## குணம் வீடியோ
## எமது புதிய வெளியீடுகள்

1] ராஜா - குஷ்பு
"கப்டன் மகள்" [ஒறிஜினல்]

2] கார்த்திக் - கௌதமி
"சின்னக்கண்ணம்மா" [ஒறிஜினல்]

புதிய, பழைய படங்கள் அனைத்தையும் நல்ல பிரதிகளில் நீங்கள் பெற்றுக் கொள்ளவும், பதிவு செய்து கொள்ளவும் என்றும்:

## குணம்வீடியோ சென்டர்



## கம்பியூட்டர் கல்வி

❋ BASIC ❋ dBASE III+ ❋ LOTUS 1-2-3
❋ WORD STAR 5.5 ❋ PASCAL
❋ COMPUTER TECHNOLOGY


## புதியவகுப்புக்கள் ஆரம்பம்

திங்கள், புதன், வெள்ளி 12-03-93
சனி, ஞாயிறு 13-03-93

★ O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
★ உத்தியோகத்தர்களுக்கான விசேட மாலை நேர, விடுமுறை கால வகுப்புக்கள் நடைபெறுகிறது.
★ கூடியநேர செய்முறை பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

தனிப்பட்ட முறையில் கம்பியூட்டர் பயில விரும்புவோர் எந்நாட்களிலும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:




UNIKCO
COMPUTER
CENTRE

37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி/6161)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
கலை, வர்த்தக வினா விடை
(DAY CLASS)

| | பாடங்கள் | ஆசிரியர் | நேரம் |
| --- | --- | --- | --- |
| செவ்வாய், வியாழன் | பொருளியல் | திரு. கலாகரன் | 8-00—10-00 |
| | கணக்கியல் | திரு. S.K. பிரபாகரன் | 11-00—1-00 |
| | வர்த்தகம் | திரு. இரகுநாதன் | 1-00—2-00, 3-00-4-30 |
| | அளவையியல் | திரு. A. பிரபாகரன் | 10-00—11-00 |
| | இந்து நாகரிகம் | திரு. காரைசுந்தரம் பிள்ளை | 4-00—5-00 |
| சனி, ஞாயிறு | தமிழ் | திரு. குழந்தை | 7-00—8-00 |
| | புவியியல் | திரு. குணராசா | 8-00—9-00, 10-00—11-00 |
| | அரசியல் | திரு. ஜெயகாந்தன் | 8-00—9-00 |
| | வரலாறு | திரு. ஸ்ரீதரன் | 11-00—12-00, 2-00—3-00 |

(சி/6140)



## நினைவு கூருகின்றோம்...

யாழ்ப்பாணம்

★

கோல்டன்கொமற் முட்டை இடும் இளங்கோழிகள். தடுப்பு ஊசி போடப்பட்டவை. விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் (4069)

---

## 5-3-93 இல் சனி மாற்றம்

14-4-93 இல் செவ்வாய் மாற்றம் 1-6-93 வரை வியாழ வக்கிரகம் 1993 - 94 ஸ்ரீமுக புதுவருட பலன்களும் எண் ஜோதிடமும் அடங்கியது. ரூபா 8.50 எங்கும் விற்பனையாகின்றது. கனகா ரேடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி (நூலாசிரியர்: Prof. சத்தியதாஸன்) (4414)

---

## ஊக்குவிப்பு கொடுப்பனவு

11-6-90 முதல் 31-12-90 வரையிலான ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கான வரவுச் சான்றிதழ் படிவங்கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: சோதி புத்தகசாலை பஸ் நிலையம், சாவகச்சேரி. (4419)

---

## ஆங்கில வகுப்புக்கள்

பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களால் நடாத்தப்படும். ஆண்டு 7 தொடக்கம் ஆண்டு 11 வரைக்கும். ஆரம்பம்: 9-3-93 தொடர்புகொள்ளவும். PUNCH ACADAMY கண்டிவீதி, சாவகச்சேரி. (4421)

---

## நிர்வாகிகள் தெரிவு

(குருநகர்)

யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாச வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கீழ்க்கண்டோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ச. த. கணநாதன் (அரியாலை ச.ச.நி) உபதலைவர்கள்: 1. திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை (பாசையூர் ம. மு. ச. ச. நி) 2. திரு. க. நாகேந்திரம் (நல்லூர் தெற்கு ச. ச. நி)

செயலாளர்: திரு. சி. கி. நவரட்ணம் (திருவள்ளுவர் ச. ச. நி.) உபசெயலாளர்: திரு. அ. க. ஏணஸ்ட் (தொடர்மாடி ச. ச. நி.) பொருளாளர்: திரு. டானியல் அன்ரனி (சென். மேரிஸ் ச. ச. நி.) பத்திராதிபர்: திரு. சி. பாலசிங்கம் (பாரதி மன்றம் ச. ச. நி.)

மேலும் 15 வலயப்பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டனர். (21)

---



அமரர்

## கந்தையாகிருஷ்ணபிள்ளை

மலர்வு 24-08-1921 — உதிர்வு 06-02-1993

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
வாழ்ந்த உங்கள் நினைவு எம்
நெஞ்சை விட்டு என்றும்
அகலாது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

35/3 கொழும்புத்துறை சாலை
சுண்டிக்குளி

-குடும்பத்தினர்
(4416)

---

## உனது 6-ம் உனது 2-ம் ஆண்டு நிறைவில்

எமது விழிகள் சிந்தும் அஞ்சலி — எமது கண்ணீர் பாமாலை





| வீரவேங்கை **கண்ணன்** (பாபு) | | வீரவேங்கை **கண்ணன்** (பாலகிருஸ்ணன்) |
|---|---|---|
| 1967-06-06 | < வீரஜனனம் > | 1973-07-08 |
| 1987-03-08 | < வீரச்சாவு > | 1991 02-05 |

## லெப்.லவக்குமார் உத்தமன்

வீரச்சாவு 1987-03-08

களம் கண்டாய், சினம் கொண்டாய்
நொடிப் பொழுதில் பகைவனை வென்றாய்
நாவற்குழி தனில் சிங்கள ராணுவத்தை
எதிர்த்து மாவீரனாய் மலர்ந்திட்டாய்
உன் பாதை தனில் உன் தம்பி, உன்
நாமம் தனை சூட்டி தச்சன் காட தனில்
மாவீரனாய் மலர்ந்திட்டான்
தவியாய் தவிக்கின்றோம் எப்போ உம்மை
காண்போம்! உம் கல்லறை மலர
எம் கண்ணீர் மாலைகளால் அர்ச்சிக்கின்றோம்
எழுந்து வருவீர்களோ!

பாபு வீதி,
கண்ணன்
இத்தாவில், பளை.
(4413)

உங்கள் நினைவால்
துடித்து துயருறும் அம்மா,
சகோதரிகள், சகோதரர்கள்,
நண்பர்கள்.

---

## மீண்டும்......

## குணம் வீடியோ

## எமது புதிய வெளியீடுகள்

1] ராஜா - குஷ்பு
**"கப்டன் மகள்"** [ஒறிஜினல்]

2] கார்த்திக் - கௌதமி
**"சின்னக்கண்ணம்மா.'** [ஒறிஜினல்]

புதிய, பழைய படங்கள் அனைத்தையும் நல்ல பிரதிகளில் நீங்கள் பெற்றுக் கொள்ளவும், பதிவு செய்து கொள்ளவும் என்றும்:

# குணம்வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(சி-6157)

---

## கலந்துரையாடல்

தற்போது யாழ்.மாவட்டத்தில்இருக்கும் கிளிநொச்சி, வவுனியா, முல்லை - மணலாறு, மன்னார் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் 09-03-1993 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக கைத்தொழில் பகுதியில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்
(சி-6158)

---

## வேலை வாய்ப்பு

கையால் அடிக்கும் நிற்றிங் மெசினில் (பின்னல் வேலை)வேலை செய்யத் தெரிந்தவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் வேலை வாய்ப்பு உண்டு.

**15-03-1993ஆம் திகதிக்கு**
முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 184
மே/பா ஈழநாதம்.
(சி-6159)

---

# ஸ்ரீதர் திரையரங்கில்...

# "தமிழோசை"

**தினசரி மாலை**
**4 மணிக்கும் 6 மணிக்கும்**
காண்பிக்கப்படுகிறது. சி-6149

---

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய், வியாழன் | பொருளியல் | திரு. கலாகரன் | 8-00—10-00 |
| | கணக்கியல் | திரு.S.K.பிரபாகரன் | 11-00—1-00 |
| | வர்த்தகம் | திரு.இரகுநாதன் | 1-00—2-00, 3-00-4-30 |
| | அளவையியல் | திரு.A.பிரபாகரன் | 10-00—11-00 |
| | இந்து நாகரிகம் | திரு.காரைசுந்தரம் பிள்ளை | 4-00—5-00 |
| சனி, ஞாயிறு | தமிழ் | திரு.குழந்தை | 7-00—8-00 |
| | புவியியல் | திரு.குணராசா | 8-00—9-00, 10-00—11-00 |
| | அரசியல் | திரு.ஜெயகாந்தன் | 8-00—9-00 |
| | வரலாறு | திரு.ஸ்ரீதரன் | 11-00—12-00, 2-00—3-00 |

(சி/6140)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-08

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - அச்செழுப் பகுதியிற் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கஜன்** [இரத்தினசபாபதி கணேசகுமார் - வளலாய், அச்சுவேலி - யாழ் ]

அம்பாறை - நாவிதன்வெளிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ் - கைதடி, நாவற்குழிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கண்ணன்** (கந்தையா பாபு - பாபு வீதி, இத்தாவில், பளை - கிளிநொச்சி)

**லெப். உத்தமன்** (பூதப்பிள்ளை லவக்குமார்- ஏழாலை மேற்கு - யாழ். )

யாழ் - வல்வெட்டித்துறைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவக் காவலரண்கள் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**ஸ்ராலின்** (விருத்தாசலம் சிவசங்கர் - சிவசங்கர் வீதி, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை - யாழ். )

1989ஆம் ஆண்டு யாழ் - காங்கேசன் துறை, கீரிமலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினராற் சுட்டுக் கொல்லப்பட்ட

நாட்டுப்பற்றாளர்களான மூவர்

1991ஆம் ஆண்டு யாழ்- மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். வீரா** (தம்பிமுத்து தர்மசீலன் - ஏறாவூர்- 05- மட்டு. )

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி-6154)

நல்லூர் [illegible] நூலகம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

தொட்டிலை ஆட்டும் கரமே,
தரணியை ஆளும் கரம்.
— வில்லியம் ஆர். வலெஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

# பெண் விடுதலை

இன்று சர்வதேச மகளிர் தினமாகும். ஆண்டாண்டு காலமாக அடக்கப்பட்டு வரும் பெண்ணினம் தன் உரிமைக்காக சர்வதேச ரீதியாகக் குரல் எழுப்பும் எழுச்சி நாள். இவ் எழுச்சி நாள் அடக்கு முறைக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழீழத்தில் கொண்டாடப்படவுள்ளமை பெரிதும் வரவேற்கப்பட வேண்டியது ஆகும்.

பெண்ணினத்தின் உரிமைகள் குறித்து நீண்ட காலமாகவே உலகில் பல போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றபோதும், இதுவரை பெண்கள் தமது பூரண உரிமைகளைப் பெற்றுவிடவில்லை என்றே கூறவேண்டும். உலகில் நாடுகளுக்கு ஏற்பவும் வெவ்வேறு சமுதாயங்களுக்கு ஏற்பவும் பெண்களின் உரிமைகள் வேறுபட்ட அளவுகளில் பேணப்பட்டு வரினும், உலகின் எப் பகுதியிலும் பெண்கள் தமது பூரண உரிமைகளைப் பெற்று விட்டார்களா என்றால், இல்லை என்றே கூறலாம்.

ஆனால், பெண்களின் உரிமைகள் ஒரு சமூகத்தின் கல்வி, பொருளாதாரம், என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது, கல்வி, பொருளாதார வளர்ச்சி பெற்ற சமூகங்களில் பெண்களுக்குரிய உரிமைகள்கல்வி அறிவு குறைந்த பொருளாதாரத்தில் பின் தங்கிய சமூகங்களில் இருப்பதைவிட பெருமளவில் உயர்ந்து காணப்படுகின்றது.

இதேவேளை, பெண்கள் மீதான ஒடுக்கு முறையானது, ஒவ்வொரு சமுதாயக் கட்டுமானத்துடன் இணைந்த ஒன்றாகவே காலம் காலமாக இருந்து வருகின்றது. இதன் காரணமான பெண்ணினம் வெவ்வேறு சமூகங்களில், வெவ்வேறு வடிவங்களில் ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்து வருகின்றது இதில் பொருளாதாரப் புறக்கணிப்பு, ஆணாதிக்கவாதிகளின் அடக்கு முறை, கலாசாரப் புறக்கணிப்பு என்பவற்றோடு, தமிழீழ பெண்கள், சிங்களப் பேரினவாதத்தின் இனவாத அடக்கு முறைக்கும் முகம் கொடுக்கவேண்டிய அவலமான நிலையில் உள்ளனர்.

எமது சமுதாயத்தைப் பொறுத்த வரையில் நீண்டகாலமாக இருந்து வரும் மூட நம்பிக்கைகளும், இதன் காரணமாக வளர்ச்சி கண்டுள்ள பழக்க வழக்கங்களும், பிற்போக்குத்தனமான சமுதாய அமைப்பும் பெண்களின் சுதந்திரமான-சமத்

# தலைவரின் சமஷ்டி

துள்ளனர்.

சிறிலங்கா அரசியல் யாப்பு சிறிலங்கா ஒருங்கிணைந்த ஒற்றை ஆட்சி நாடு என்பதை வலியுறுத்துகிறது. எனவே அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டியிருந்தால், அதற்கும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை வாக்குகள் வேண்டும். பொதுஜன வாக்கெடுப்பில் மக்களின் ஒப்புதலும் பெரும்பான்மையாக இருக்க வேண்டும்.

நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் போர் செய்து கொண்டிருந்த விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு வரும்படி அழைத்தேன். ஆயுதங்களைக் களைந்துவிட்டு ஜனநாயக முறையில் கலந்து கொள்ளும் படியும் நான் அவர்களைக் கேட்டுக்கொண்டேன், புலிகள் ஜனநாயக முறைக்குத் திரும்ப ஒப்புக் கொண்டதன் பேரில் பதினான்கு மாதங்களுக்கு மேலாக அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினேன். அவர்கள் அரசியல் பிரிவை அரசியல் கட்சியாக மாற்றவும் விரும்பினேன். அவர்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தில் புதிய தேர்தலை நடத்த வேண்டும் என்றும் கேட்டார்கள். மாகாண சபை சம்பந்தமான சட்டதிட்டங்களின் கீழ் அப்போதைய மாகாண சபையைக் கலைக்கும் நிலையில் அரசு இருக்கவில்லை. ஆனால் பின்னர், மாகாண சபை அரசியல் சாசனத்துக்கு மாறாக நடவடிக்கைகள் எடுத்த படியால் மாகாண சபையைக் கலைக்க வேண்டியதாயிற்று

## தெரிவுக்குழுவின் சிபார்சு பிரச்சினையை தீர்க்குமா?

**கேள்வி:** உங்கள் பாராளுமன்றத் தெரிவுக் குழு பரிந்துரைகளை வழங்கிய பிறகுசமாதானத் தீர்வுக்கான சாசத்தியம் உள்ளதா? ஆட்சி அமைப்பு இந்திய சமஷ்டி ஆட்சி முறையில் அமையுமா?

இதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு தீர்வை முன் வைப்பதுதான் நல்லது. சமஷ்டி முறையைக் கொண்டுவருவதற்கு ஒரு சட்ட ஆக்கத்தை உருவாக்குவதானால் அரசியல் சானத்தில் திருத்தம்செய்ய வேண்டும். இதற்குப் பாரளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும். ஆகவே இந்த விடயத்தில் அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசிப்பது அவசியமாகிறது ஆகவே, நான் இங்கு கூற விரும்புவது என்னவென்றால், அரசு ஓர் அரசியல் தீர்வுக்கு எதிரானதல்ல ஜூன் 1990 இல் விடுதலைப்புலிகள் அமைப்பு எமக்கு எதிராகத் திரும்பியது. புலிகள் சண்டையை ஆரம்பித்தார்கள் அன்றுமுதல் போர் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆகவே அனைத்து அரசியல் கட்சிகளும் சேர்ந்து அரசியல் தீர்வுக்கான ஒரு தேடுதலை நடத்துகின்றன. நாம் எட்டும் அரசியல் தீர்வு நிலையானதாக அமையும். அத்துடன் அரசியல் தீர்வு அனைத்து சமூகங்களுக்கும் ஏற்புடையதாகவும், நீண்டு நிலைத்திருக்கக் கூடிய முறையிலும் இருக்கும்.

## விமான தாக்குதலுக்கு பௌத்தம் இடம் அளிக்குமா?

**கேள்வி:** கண்மூடித்தனமான விமானத் தாக்குதல் நடத்த நீங்கள் கடைப்பிடிப்பதாகக் கூறும் பௌத்த மதம் எவ்வாறு இடமளிக்கின்றது? தீவிரவாதிகளை அழிக்கும் ஒரே வழியாக உங்கள் அரசு தமிழ்ப்பிரதேசங்களில் கடைப்பிடிக்கும் விமானக் குண்டுவீச்சை உங்கள்பௌத்த மதத்தின் அடிப்படையில் எவ்வாறு நியாயப்படுத்துகிறீர்கள்?

**பதில்:** இல்லை. எமது மக்களில் பெரும்பாலானோர் பௌத்த - இந்து- முஸ்லிம்-கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கின்றனர் என்பது உண்மை. இந்த வகையில் மத உணர்வுகளைப் பொறுத்தவரையில் எமது நாட்டில் சகிப்புத் தன்மை நிலவுகின்றது. நான் முதலே குறிப்பிட்டது போல எனது அரசு இராணுவத் தீர்வு ஒன்றை நாடி நிற்கவில்லை. ஆனால் சண்டை ஒன்று தொடங்கப்பட்ட பின்னர் யுத்தத்தில் பல முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன இதன் மூலம் இராணுவம் அட்டூழியம் புரிவதை அனுமதிக்கும் அளவுக்கு மனிதத்தன்மையற்ற முறையில் அரசு செயல்படுகிறது என்று நீங்கள் அர்த்தம் கொள்ளக்கூடாது. ஆனால் ஆயுதப்படையினர் மற்றும் பொலீசாரின் கடமைகளில் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டியது முக்கியமானதாகும்.

## பிரச்சினை தீரும் என நம்பிக்கையுடன் இருக்கிறேன்

**கேள்வி:** சிறிலங்காவில் நீண்டகாலமாகஇருந்து வரும் முக்கியமான பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு விரைவிலே அல்லது சற்றுத் தாமதித்தோ தீர்வு காணப்படமுடியும் என்று நம்புகிறீர்களா?

**பதில்:** ஆம் நான் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறேன். அது மட்டுமல்ல நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் ஒரு தலைப் பட்சமாக விடுதலைப் புலிகளை நோக்கி அழைப்புவிடுத்தேன் என்பதையும் உங்களுக்குச் சொல்லி வைக் விரும்புகின்றேன். நான் முன்பே குறிப்பிட்டது போல வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுவே அவர்களது ஓரே கோரிக்கையாக இருந்தது. இதற்கான சட்டத் திருத்தங்கள் மற்றும் சட்டவாக்கங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்த போதே அவர்கள் மீண்டும் யுத்தத்தை தொடங்கினர். இங்கு நான் இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்டவேண்டும். பிரிவினையைகோரி ஆயுதம் தாங்கிப் போராடிய பல குழுக்கள் தற்போது பிரிவினையைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டுள்ளன. மற்றக்குழுக்கள் எல்லாம் பிரிவினையைக்கைவிட்டு அரசியல் தீர்வு ஒன்றையே நாடி நிற்கின்றன. நான் ஜனாதிபதி என்ற வகையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வை அமுல்ப்படுத்த தயாராக இருக்கிறேன் என உறுதி அளிக்க முடியும். புலிகள் இயக்கம் மட்டுமே ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்ளாமல் வடக்கு-கிழக்கு பகுதியில் ஒரு யுத்தத்தை நடத்திவருகிறது- எனவே புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல-

## உங்கள் கூற்றும் செயலும் முரண்பாடாக உள்ளது

**கேள்வி:** குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் வாழும் மக்கள் அடிப்படை உணவு மற்றும் மருத்துவப் பொருள்கள் கிடைக்காமலும், மின்சாரம், போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் கிடைக்காமலும் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் கழித்திருக்கின்றார்கள். இந்த நிலையிலும் கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சு, ஷெல் வீச்சுகளும், இடம்பெற்று வருகின்றது. கிளாலி கடனீரேரிப் பகுதியை கடப்பதில் கூட படுகொலைகள் நடந்தப்படுகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் பதவியேற்றபோது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று கூறியிருந்தீர்கள் ஆனால் இவை அனைத்தும் அதற்கு எதிர்மாறாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் இன்றைய கஷ்டநிலையைப் போக்குவது தொடர்பாக உண்மையாகவே உங்களுக்கு ஆர்வம் இருக்கின்றதா?

**பதில்:** இங்கு நடக்கும் சம்பவங்கள் பற்றிய முழுத்தகவல்களும் தங்களுக்கு கிடைக்கவில்லை என்றே கருதுகிறேன். நாங்கள் என்ன செய்கிறோம் என்பது பற்றியும் நீங்கள் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. வடக்கிலும், கிழக்கிலும் வாழும் அப்பாவி மக்களின் நலன்கள் பற்றி எமக்குள்ள அக்கறைப் பற்றிப் புரிந்து கொள்ளும்படி கேட்கிறேன். அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்ய எம்மாலான முயற்சி அனைத்தும் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இந்த விநியோகங்கள் மக்களுக்கு கிடைப்பதில் குறுக்கீடுகள் இருக்கின்றன.

**கேள்வி:** சிறிலங்காவை போன்ற ஒரு வளர்முக நாடு பாதுகாப்புக்கு இத்துணை பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்து கொண்டு தாக்குப் பிடிக்க முடியுமா?

**பதில்:** உங்களுடன் நான் முழுமையாக உடன்படுகிறேன். இந்த வளங்கள் எமது மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்தப்பட வேண்டியவையே, ஆனால் இன்று அவ்வாறாக இல்லை எனினும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்கம் யு. என். எச். சீ. ஆர். போன்ற உலக நிறுவனங்கள் பலவும் நாம் இந்தச் செலவைக் கட்டுப்படுத்த எடுக்கும் முயற்சிகள் பற்றி நன்கு புரிந்துள்ளன.

## உங்கள் ஜனநாயகத்தில் பத்திரிகைச் சுதந்திரம் ?

**கேள்வி:** ஜனநாயகம் பற்றி நீங்கள் பெரிதாகப்

ற்கு சொன்னால் அண்மையில் லத்திவ பத்தி

## விளையாட்டு :

யாழ். இந்துக்கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 6ஆம் திகதி சனிக்கிழமையும் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக்கல்லூரி மொத்தம் 191 ஓட்டங்களைப் பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 324 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ். இந்துக் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்சில் 9 விக்கெட் நஷ்டத்திற்கு 111 ஓட்டங்களைப் பெற்றது. (42)

## மாணவருக்கு சேமிப்பு புத்தகம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகள், பாடசாலை மாணவர்கள் அடங்கிய மரநடுகை போட்டித் திட்டமொன்றை தொடர்ச்சியான மூன்று ஆண்டு காலங்களுக்கு நடைமுறைபடுத்திவருகின்றது. , இத் திட்டம் கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இதன் இரண்டாம்கட்ட நடவடிக்கையாக பாடசாலை மாணவர்களுக்கு சேமிப்பு புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி நாளை யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் கலந்துகொள்ளவுள்ளார். என தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விடுத்த செய்திக்குறிப்பென்று தெரிவிக்கின்றது.

## தீரச்செயல்

சித், சேகர், இளம்பரிதி (ரொபேட்), திருமேனி(ராம்கி) கோபி, சத்தியராஜ், பரணி, வேல்ராஜ், பழனி, இளையவன் (ஜெகதீஸ்), சசிகுமார், சண், வதனன், அழகுநம்பி (லுக்மன்), நிலவன் (மாவி), கண்ணபிரான், முத்தப்பன், பொறையன், மறைக்கோன், மறைமலை, கவியப்பெருமான், சேரன், புலிக்குட்டி, சூரன், மதுரைவீரன், தினகரன், தங்கப்பன்(நுகீர்), திருமாறன், (நெல்சன்), அன்பு (நேசன் இசையரசன் (கீதன்), வளவன் (இந்து), தமிழினியன் (மொசாட்), தவச்செல்வன்.

26-02-1993 அன்று கிளாலி

இருப்பதைவிட பெருமளவில் உயர்ந்து காணப்படுகின்றது.

இதேவேளை, பெண்கள் மீதான ஒடுக்குமுறையானது, ஒவ்வொரு சமுதாயக் கட்டுமானத்துடன் இணைந்த ஒன்றாகவே காலம் காலமாக இருந்து வருகின்றது. இதன் காரணமான பெண்ணினம் வெவ்வேறு சமூகங்களில், வெவ்வேறு வடிவங்களில் ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்து வருகின்றது இதில் பொருளாதாரப் புறக்கணிப்பு, ஆணாதிக்கவாதிகளின் அடக்கு முறை, கலாசாரப் புறக்கணிப்பு என்பவற்றோடு, தமிழீழ பெண்கள், சிங்களப் பேரினவாதத்தின் இனவாத அடக்குமுறைக்கும் முகம் கொடுக்கவேண்டிய அவலமான நிலையில் உள்ளனர்.

எமது சமுதாயத்தைப் பொறுத்த வரையில் நீண்டகாலமாக இருந்து வரும் மூட நம்பிக்கைகளும், இதன் காரணமாக வளர்ச்சி கண்டுள்ள பழக்க வழக்கங்களும், பிற்போக்குத்தனமான சமுதாய அமைப்பும் பெண்களின் சுதந்திரமான-சமத்துவமான வாழ்விற்குப் பெரும் இடையூறுகளாகவே இருந்து வருகின்றன. பொதுவாகவே சமூகத்திலுள்ள பெண்பிள்ளைகள் என்ற புறக்கணிப்பும், சீதனமுறையும் மறுமணமுறைகளில் உள்ள இடையூறுகளும் பெண்களின் வாழ்வை பெரும் அவலத்திற்கு உள்ளாக்கியுள்ளன.

இதேபோன்று, பெண்ணின் உழைப்பிற்கு ஏற்ற அங்கீகாரம் அளிக்கப்படாமையும், பெண்ணின் பொருளாதாரத் தேட்டம் இரண்டாம் பட்சமாகக் கணிக்கப்படுகின்றமையும் குடும்பத்தின் தீர்மானங்களில் பெண்கள் புறக்கணிக்கப்படுவதும் இச் சமூகத்தில் உள்ள ஆண் ஆதிக்கத்தை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

இத்தோடு, இன்று சிங்களப் பேரினவாதம் தமிழீழப் பெண்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள காட்டுமிராண்டித் தனமான அடக்குமுறையானது சகல ஒடுக்கு முறையை விடவும் கொடுமையானதும் மிருகத்தனமானதுமாகும். இதில் பாலியல் வன்முறை என்றும், சித்திரவதை என்றும், படுகொலைகள் என்றும் அடக்குமுறை வடிவங்கள் நீண்டு கொண்டே போகின்றன.

இந் நிலையில். பெண்ணினத்தின் விடுதலை என்பதுஎமது சமுதாயத்தில் உள்ளபிற்போக்கான மூடநம்பிக்கைகளுக்கும், பொருளாதார ஒடுக்குமுறைக்கும் எதிரானது மட்டுமல்லாமல், சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான நீண்டதொரு ஆனால், மிகவும் உறுதியான போராட்டத்திலேயே தங்கியுள்ளது. இப்போராட்டத்தில்பல்வேறு இடர்பாடுகளை தமிழீழப் பெண்கள் எதிர்நோக்க வேண்டி வரினும் தமது உரிமைகளை வென்றெடுப்பது அவசியமானால் அவர்கள் போராடியே ஆகவேண்டியநிலையில் உள்ளனர்.

இதேவேளை, தமிழீழப் பெண்கள் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடக்கூடிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளனர். இதன்விளைவாக தமக்கெதிரான சமூக அடக்குமுறைக்கு எதிரான போரிலும் குறிப்பிடக் கூடிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பெண்கள் தமது போராட்டத்தை மேலும் விஸ்தரிக்க வேண்டும். அப்பொழுதே தேசிய இன விடுதலையுடன் தமக்கெதிரான சமூக, பொருளாதார ஒடுக்கு முறையிலிருந்து அவர்களால் விடுதலை பெறமுடியும். இதன் மூலம் சமநீதியான ஒரு சமுதாயத்தை அவர்களால் படைக்க முடியும்.

## பௌத்தம் இடம் அளிக்குமா?

**கேள்வி:** கண்மூடித்தனமான விமானத் தாக்குதல் நடத்த நீங்கள் கடைப்பிடிப்பதாகக் கூறும் பௌத்த மதம் எவ்வாறு இடமளிக்கின்றது? தீவிரவாதிகளை அழிக்கும் ஒரே வழியாக உங்கள் அரசு தமிழ்ப்பிரதேசங்களில் கடைப்பிடிக்கும் விமானக் குண்டுவீச்சை உங்கள்பௌத்த மதத்தின் அடிப்படையில் எவ்வாறு நியாயப்படுத்துகிறீர்கள்?

**பதில்:** இல்லை. எமது மக்களில் பெரும்பாலானோர் பௌத்த - இந்து- முஸ்லிம்-கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கின்றனர் என்பது உண்மை. இந்த வகையில் மத உணர்வுகளைப் பொறுத்தவரையில் எமது நாட்டில் சகிப்புத் தன்மை நிலவுகின்றது. நான் முதலே குறிப்பிட்டது போல எனது அரசு இராணுவத் தீர்வு ஒன்றை நாடி நிற்கவில்லை. ஆனால் சண்டை ஒன்று தொடங்கப்பட்ட பின்னர் யுத்தத்தில் பல முறைகள் கடைப் பிடிக்கப்படுகின்றன இதன் மூலம் இராணுவம் அட்டூழியம் புரிவதை அனுமதிக்கும் அளவுக்கு மனிதத்தன்மையற்ற முறையில் அரசு செயல்படுகிறது என்று நீங்கள் அர்த்தம் கொள்ளக்கூடாது. ஆனால் ஆயுதப்படையினர் மற்றும் பொலீசாரின் கடமைகளில் பொதுமக்களைப் பாது காக்க வேண்டியது முக்கியமானதாகும்.

## ராணுவத் தீர்வை அரசு நாடவில்லை

**கேள்வி:** இராணுவ வழிமுறைகள் மூலம் அரசியல் தீர்வு ஒன்றைக்காண நீங்கள் முற்பட்டுள்ளீர்கள் என்று கருதலாமா?

**பதில்:** இல்லை நாங்கள் இராணுவத் தீர்வை நாடி நிற்கவில்லை. உண்மையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காணவே நாம் விரும்புகின்றோம். ஆனால் தீர்வானது சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரையும் திருப்திப் படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதையே கருத்தில் கொண்டுள்ளோம்.

**கேள்வி:** நீங்கள் அரசியல் தீர்வு பற்றிப் பேசிக் கொண்டாலும் கூட பொதுமக்கள் தான் இந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை உங்களால் புரிந்துகொள்ளமுடியவில்லையா? தீவிரவாதிகளைத்தான் தாக்குகின்றோம் என்றஅடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதை ஆயுதப் படையினரால் தவிர்க்க இயலவில்லை அல்லவா?

## ஐ. நா. தலையீடு தற்பொழுது தேவையில்லை

**பதில்:-** ஆயுதப் படையினர் பொதுமக்களைப்பாது காப்பார்கள் எனினும், இதற்கு மேலாக அவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாதல்லவா?

**கேள்வி:** அழகான வளம் மிகுந்த இலங்கைத் தீவில் பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் இனப்பிரச்சினையால் மில்லியன் கணக்கான பவுண்கள் போருக்குப் பயன்படுத்தப்பட்டு வீணாவதைத் தவிர்க்கும் நோக்குடன் இனப் பிரச்சினையை ஐ. நா. போன்ற உலக மன்றம் ஒன்றுக்கு எடுத்துச்செல்லப்படுவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? ஐ. நா. தலையிடுவதால் இனப் பிரச்சினையில் ஒரு நீடித்த நிலையான சமரசம் ஏற்பட வாய்ப்புண்டல்லவா?

**பதில்:** பிரச்சினைக்குத்தீர்வு காணக்கூடிய ஆற்றல் எமது மக்களுக்கு உண்டு என்று நான் திடமாக நம்புகிறேன். ஆனால் அப்படித் தீர்வுகாண வேண்டும் என்ற மனோதிடம் தான் தேவைப்படுகின்றது. இதனால் எமது நாட்டு மக்களிடையே இருக்கும் பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்கே முன் உரிமை கொடுக்கப்பட வேண்டும். எனவே ஏன் ஐ. நா. மூலம் தீர்வுகாண்பது பற்றி நாம் கவலைப்பட வேண்டும்?

**கேள்வி:** உலகின் பல பாகங்களிலும் நடக்கும் பல்வேறு பிரச்சினைகளிலும் ஐ.நா. தலையிட்டு நீடித்த நிலையான தீர்வைக் காண்பதற்கு உதவி வருகின்ற இன்றைய நிலையில் உங்கள் நாட்டுப் பிரச்சினையில் ஐ. நா. தலையீடு தேவையற்றது என்றா கருதுகிறீர்கள்?

**பதில்:** நான் அப்படிக் கருதவில்லை. ஆனால் எமது பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஆற்றல் எமது மக்களுக்கு இருக்கின்றது என்றே கருதுகின்றேன். அதற்கான ஆர்வமும் திறனும் எமக்குஉண்டு என்றே கருதுகிறேன். இதனால்தான் எனது அரசு விடுதலைப் புலிகளை நோக்கி நட்புக் கரத்தை நீட்டியிருந்தது.

ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் பதவியேற்றபோது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று கூறியிருந்தீர்கள் ஆனால் இவை அனைத்தும் அதற்கு எதிர்மாறாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் இன்றைய கஷ்டநிலையைப் போக்குவது தொடர்பாக உண்மையாகவே உங்களுக்கு ஆர்வம் இருக்கின்றதா?

**பதில்:** இங்கு நடக்கும் சம்பவங்கள் பற்றிய முழுத்தகவல்களும் தங்களுக்கு கிடைக்கவில்லை என்றே கருதுகிறேன். நாங்கள் என்ன செய்கிறோம் என்பது பற்றியும் நீங்கள் அக்கறைப்படுவதுணை பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்து கொண்டு தாக்குப் பிடிக்க முடியுமா?

**பதில்:** உங்களுடன் நான் முழுமையாக உடன்படுகிறேன். இந்த வளங்கள் எமது மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்தப்பட வேண்டியவையே; ஆனால் இன்று அவ்வாறாக இல்லை எனினும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்கம் யு. என். எச். சீ.ஆர். போன்ற உலக நிறுவனங்கள் பலவும் நாம் இந்தச் செலவைக் கட்டுப்படுத்த எடுக்கும் முயற்சிகள் பற்றி நன்கு புரிந்துள்ளன.

## உங்கள் ஜனநாயகத்தில் பத்திரிகைச் சுதந்திரம் ?

**கேள்வி:** ஜனநாயகம் பற்றி நீங்கள் பெரிதாகப் பேசுகிறீர்கள் ஆனால்ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சேவைகளிலும் சரி, ரூபவாகினியிலும் சரி அரசாங்க நிகழ்ச்சிகளும் உங்களது தனிப்பட்ட செய்திகளும் இடம் பெறும் அளவுக்கு எதிர்க்கட்சியினரின் பிரசாரத்திற்கு இடமளிக்கப்படுவதில்லையே இது ஏன்?

**பதில்:** நீங்கள் இவ்விடயத்தைச் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றே நினைக்கிறேன். எமது நாட்டில் தொடர்பு சாதனங்களின் சுதந்திரம் பேணப்படுவது என்பதை நீங்கள் அறிந்திருக்கக் கூடும் இங்கு பல்வேறு பத்திரிகைகள் வெவ்வேறு மொழிகளில் வெளியிடப்படுகின்றன. எமது நாடு ஜனநாயக நாடு. மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும்சுதந்திரத்தை உடையவர்கள். ரூபவாகினி, ஐ. ஏ. என். போன்ற ஒலிபரப்பு சேவைகளுக்கு சில வழி காட்டும் முறைகள் உள்ளன. இதற்குப் புறம்பாக வெளியிடப்படும் பத்திரிகைகளைப் பொறுத்த வரையில் அவை தமது கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் முழு அளவில் வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** ஒரு உதாரணத்திற்கு சொன்னால் அண்மையில் லத்திவ பத்திரிகை மீது மிரட்டல் விடுக்கப்பட்டதில் அரசுக்கு நேரடியாகவே சம்பந்தமுள்ளது. அத்துடன் பல பத்திரிகையாளர் அரச ஆதரவு பெற்ற குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமைகள் இலங்கையில் இப்போது உண்டு. இதனால் தான் ஜனாதிபதியின் பதில் என்னைத் திருப்திப் படுத்துவதாக இல்லையே?

**பதில்:** இங்கும் கூட நீங்கள் ஒருதலைப் பட்சமான செய்திகளுக்கு மட்டுமே செவி சாய்த்துள்ளீர்கள். லக்திவ வைப் பொறுத்த வரையில், அரசு எந்த மிரட்டலிலும் ஈடுபடவில்லை நாட்டில் நடைமுறையில் இருக்கும் பல்வேறு சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றி நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். கொழும்பு மாநகர சபை லக்திவ பத்திரிகை நிறுவனம் மீது பத்திரிகை கட்டட அமைவிடம் தொடர்பாக ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததே தவிர அரசு லக்திவ பத்திரிகையை தடை செய்யவில்லை. பத்திரிகை நிறுவனம் என்பதற்காக நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்குகள் மீறப்படுவதற்கு எவரும் அனுமதிக்கப்படலாகாது அல்லவா?

## ஜனசவிய திட்டம் வறுமையை ஒழிக்குமா?

**கேள்வி:** ஜனசவிய திட்டம் தற்போது நான்கு ஆண்டுகளாக நடக்கின்றது. நீங்கள் நினைப்பதுபோல் இந்த திட்டத்தால் வறுமையை ஒழிக்க முடியுமா?

**பதில்:** ஜனசவிய நாட்டின் பிரஜைகளின் ஒரு சக்தி விசேடமாக வறிய மக்களின் சக்தி கிராமங்களை வளர்க்கும் ஒரு திட்டம். தற்போது இலங்கையில் 14 லட்சம் வறியமக்கள் ஜனசவிய திட்டத்திற்குள் இருக்கின்றனர். அவர்களுக்கு தொழிற் பயிற்சிகளைச் செய்து கொடுத்துள்ளேன். இதனால் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

தற்போது மூன்று கட்டங்களை முடித்துள்ளோம். மக்களினதும் நாட்டினதும் ஒரு சக்தியாக ஜனசவிய இருக்கின்றது. முன்னர் இருந்த திட்டம் அபிவிருத்திக்கு உதவாதமையினாலேயே ஜனசவிய திட்டத்தை தேர்ந்து எடுத்தோம். ஜனசவிய மக்களின் சக்தியுடன் ஒன்றிணைந்து செயல்பட ஏதுவாக உள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

கழகம் விடுத்த செய்திக்குறிப்பென்று தெரிவிக்கின்றது.

---

### தீரச்செயல்

சித், சேகர், இளம்பரிதி (ரொபேட்), திருமேனி(ராம்கி) கோபி, சத்தியராஜ், பரணி, வேல்ராஜ், பழனி, இளையவன் (ஜெகதீஸ்), சசிகுமார், சண், வதனன், அழகுநம்பி (லுக்மன்), நிலவன் (மாவி), கண்ணபிரான், முத்தப்பன், பொறையன், மறைக்கோன், மறைமலை, கவியப்பெருமான், சேரன், புலிக்குட்டி, சூரன், மதுரைவீரன், தினகரன், தங்கப்பன்(நுகீர்), திருமாறன், (நெல்சன்), அன்பு (நேசன் இசையரசன் (கீதன்), வளவன் (இந்து), தமிழினியன் (மொசாட்), தவச்செல்வன்.

26-02-1993 அன்று கிளாலி கடல் நீரேரியில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான நீருந்து விசைப்படகு ஒன்று கடற் கண்ணி வெடியால் அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் நான்கு கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் மூவர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதல் வெற்றிபெற, துணிகரமாக கடற்கண்ணியை விதைத்து செயற்பட்டமைக்காக சேரன் என்ற போராளிக்கு அதிவிசேட பரிசும், நம்பி, எல்லாளன், சரத்பாபு ஆகியோருக்கு விசேட பரிசில்களும் தலைவரால் வழங்கப்பட்டது.

04-08-1992 இல் வவுனியா கோட்டத்தின் இறப்பமடு இராணுவ மினிமுகாமிலிருந்து வெளிவந்த இராணுவத்தினரின் பவள் கவசவாகனத்தின் மீது வெற்றிகரமான தாக்குதல் நடைபெற்றது. இத்தாக்குதலின்போது 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரண்டு எல்-3 ரக நடுத்தர இயந்திர துப்பாக்கிகள் உட்பட 16 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலுக்காக திறமையாகவும், துணிகரமாகவும் வேவு பார்த்தமைக்காக கதிர்ச்செல்வன் (மோகனதாஸ்) என்ற போராளிக்கு அதிவிசேட பரிசும், சயந்தன், உதயசேகர், ரட்ணம், மாறன், வெற்றிவேல் [தியாகு], மணவாளன் [றியாஸ்] ஆகியோருக்கு விசேட பரிசில்களும் தலைவரால் வழங்கப்பட்டது.

பவள் கவசவாகனத்தில் ஏறி எல்-3 ரக நடுத்தர இயந்திரத்துப்பாக்கியால் இராணுவ முகாம் நோக்கி தாக்குதல் நடத்தி, இயந்திரத் துப்பாக்கிகளைக் கழற்றி எடுப்பதில் திறமையாகச் செயற்பட்ட ஜெகநாதன், நவநீதன் ஆகியோருக்கும் தலைவர் விசேட பரிசில்களை வழங்கினார்.

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

## 140 பேர் நாய்க்கடிக்கு உள்ளாகினர்

(யாழ்ப்பாணம்)

கடந்த பெப்ரவரி மாதத்தில் யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில் 140 பேர் நாய்க்கடிக்குள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர்.



வவுனியா பவல் கவசவாகனம் மீதான தாக்குதலிற்காக விசேட பரிசை தலைவர் பிரபாகரனிடம் இருந்து கதிர்ச்செல்வன் பெறுகின்றார். அருகில் அரசியற்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் காணப்படுகின்றார்.

# உழைப்பிற்கான ஊதியம்என்றரீதியில் தொழில் சமத்துவம் காண்போம்

## விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு பிரகடனம்

சிங்களப் பேரினவாதத்தின் கொடுமைகள்ஒருபுறமும்,எமது பழமைவாத ஒடுக்குமுறைகள் மறுபுறமுமாக தமிழீழப் பெண்ணினத்தின் வாழ்வுநிலை மிகவும் அவலம் நிறைந்ததாக உள்ளது.

சமூக இயக்கத்தின் ஒவ்வொருநகர்விலும் பெண்ணிற்கு இரண்டாந்தர நிலையே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வகையில் தமிழீழச் சமுதாயத்தில் பெண்களின் தாழ்நிலையை வெளிப்படையாகப் புலப்படுத்தி நிற்பது, தொழில் துறைகளில் பெண்கள் விடயத்தில் காட்டப்படும் பாரபட்சமாகும்.

இவ்வாறு அனைத்துலக மகளிர்தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பெண்களின் உழைப்புச் சக்தியை எமது சமூகம் முழுமையாக உறிஞ்சிவிடுகிறது. அதனால் முழுப்பயனையும் பெற்றுக்கொள்கிறது. ஆனால் அதேசமயம் அந்த உழைப்பு சக்திக்கு ஈடான ஊதியம் பெண்களுக்கு கிடைப்பதில்லை. தொழில் துறையில் ஊதியம், சமதொழில் வாய்ப்பு, பதவிஉயர்வு என்ற ரீதியில் பெண்ணினம் மிக மோசமான முறையில் பாரபட்சத்திற்கு ஆளாகிறது.

உடல்ரீதியான உழைப்பு என்றாலும் சரி, அறிவு ரீதியான உழைப்பு என்றாலும் சரி, பெண்கள் பாலியல் ரீதியாக ஒடுக்கப்படுகின்றனர். அவர்களின் ஆற்றல், அறிவு, திறமை, உழைப்பு யாவுமே 'பெண்' என்ற அளவுகோலால் அளக்கப்பட்டு நசுக்கப்படுகின்றது. பாலியல் ரீதியாகத் தோன்றியுள்ள இந்த அநீதி ஒழிக்கப்படவேண்டுமானால், பெண்ணின் சமத்துவ உரிமை நிலை நாட்டப்பட வேண்டும்.

கிடைக்கவேண்டும். இந்த அடிப்படையில் தொழிலில் சமத்துவம் காண்போம் என்ற கொள்கை நிலைப்பாட்டை இந்த அனைத்துலக மகளிர் நாள் தீர்மானமாகப் பிரகடனப்படுத்துகின்றோம்.

எமது விடுதலையை வென்றெடுக்க நாம்தான் போராட வேண்டும். இதனை தமிழீழப் பெண்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். மூடக்கொள்கைகளால் முடமாக்கப்பட்ட உள்ளத்துடன் ஊமையாக அழுது கொண்டிருந்ததுபோதும் பெண்கள் இயலாதவர்கள் இல்லைஎனஉறுதிபூணுவோம். பெண்களால் எதனையும் சாதிக்க முடியும் என்பதைத் தான் களத்தில் நின்று தீரமுடன் போராடி வருவதன் மூலம் நாம் நிரூபித்து வருகின்றோம். இந்த புரட்சிகரமான வரலாறு படைக்கப்பட்டுவரும் சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழீழப் பெண்கள் தன்னம்பிக்கையுடன் எழ வேண்டும். பெண்ணின் உழைப்பை விழுங்கும் சுரண்டல்காரர்களின் முகமூடியை கிழித்திடப்புறப்பட வேண்டும்

'அடங்கி ஒடுங்கி வாழ்கின்ற பெண்ணின் 'தலைவிதியை' மாற்றிட எம்முடன் அணி சேர்ந்திடுவீர்'' என்று அனைத்து தமிழீழப் பெண்களுக்கும் அறைகூவல் விடுகின்றோம்.

பெண்ணின் உணர்வுகள் மதிக்கப்படவேண்டும்அவளின் உரிமைகள் பேணப்பட வேண்டும் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும். என்பதில் உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கின்றார் எங்கள் தேசியத்தலைவர். தலைவரின் வழிகாட்டலின் கீழ் எமது உரிமைகளை வென்றெடுப்போம் என்ற உறுதியுடன் போராடுவோம்.

தன்னம்பிக்கையோடு தளைகளைத் தகர்த்து பெண்உரிமையை வென்றெடுத்து, பெண்ணின் தனித்துவத்தையும், சுதந்திரத்தையும் நிலைநாட்டுவோம் என இந்த எழுச்சி நாளில் உறுதியெடுத்துக் கொள்வோம்.

# கிளிநொச்சி கோட்டத்தில் மகளிர் தின நிகழ்வுகள்

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி கோட்டத்தில் இன்று மல்லாவி, விஸ்வமடு ஆகிய பகுதிகளில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஊர்வலம் துணுக்காய் சந்தியில் ஆரம்பமாகி மல்லாவி சந்திவரை நடைபெற உள்ளதுடன் மல்லாவி சந்தியில்அமைந்துள்ள மாவீரர் ஞாபகார்த்த மண்டபத்திற்குஅருகாமையில் அமைந்துள்ள மைதானத்தில் கலை, பண்பாட்டுக் கழகத்தின் நிகழ்ச்சிகளுடன் அனைத்துலக பெண்கள் தினத்தையிட்டு நடாத்தப்பட்ட இலக்கிய ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெற உள்ளது. விசுவமடு மகா வித்தியாலயத்திலும் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [167]

## பரீட்சை முடிவுகள் ஏப்பிரலில் வரும்

[கொழும்பு]

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையினதும், கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையினதும் பெறுபேறுகள் எதிர் வரும் ஏப்பிரல் நடுப்பகுதிக்குமுன் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர்

## கிழக்கில் ஜூன் மாதத்திற்குள் புலிகளை ஒடுக்க உத்தரவு

[கொழும்பு]

எதிர்வரும் ஜூன் மாதத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு வசதியாக கிழக்கு மாகாணத்தில் புலிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி இராணுவத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திட்டமிட்டபடி ஜூன்மாதத்தில் மாகாணசபைத் தேர்தல் நடத்த அரசாங்கம் உறுதி பூண்டிருப்பதாகவும் தேர்தல் திணைக்களம் முன்னோடி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பால பண்டித வகுப்புகள்

வடமராட்சிக் கோட்டத்துக்கான பண்டித பால பண்டித பிரவேச பண்டித வகுப்புக்கள் இன்று மாலை 3.00 மணிக்கு பருத்தித்துறைவேலாயுதம் மகாவித்தியாலயத்தில் முறைப்படி தொடங்குகின்றன இத்தொடக்க நிகழ்வில் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் பொறுப்பாளர்களும் கலந்துகொள்கின்றனர்.

மேற்படி வகுப்புக்களில் பங்கேற்க விரும்பும் வடமராட்சி கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் தவறாது வருகை தரும்படி வடமராட்சிக் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை கேட்டுள்ளார்.

## சந்திக்க வேண்டுகோள்

ஊாகாவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மக்களை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு உலர்உணவு அட்டைகளுடன் தத்தமது கிராம சேவை அலுவலர்களைச் சந்திக்குமாறு நாவற்குழி லவனிதா குடியிருப்பில்அறிவித்தல்விடுக்கப்பட்டுள்ளது. [22]

## தமிழீழப்

பெண் மீது பதித்து விட்ட படிமங்களும் பார்வைகளும் ஆண்-பெண் சமத்துவத்திற்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன.

## எதிரணியினரின் கூட்டில் லலித் குழுவினர் இல்லை

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகள் ஐந்து தேர்தல் உடன்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளன. இக்கூட்டில் ஜனநாயக ஐக்கிய முன்னணி இணையவில்லை.

இன்று வேட்பாளர் பங்கீடுகள் நடைபெறவுள்ளதாகவும் இதில் சுதந்திரக்கட்சி 302 அபேட்சகரையும், மக்கள் ஐக்கிய முன்னணி 40 அபேட்சகரையும், லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள் தலா 35 அபேட்சகரையும் நியமிக்கவுள்ளன.

இதேவேளை ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவர் பதவிக்குப் பலத்த போட்டி நிலவுவதாகவும் தெரியவருகின்றது.

## தலைவரின் சமஷ்டி

(3ஆம் பக்கத்தொடர்ச்சி)

### றோகணாவின்குடும்பத்திற்கு பாதுகாப்பு அளிக்கிறோம்

கேள்வி: றோகண விஜேவீராவின் மனைவி தற்போதும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.அவரின் பிள்ளைகளுடன் இராணுவ முகாம் ஒன்றில் அவர் உள்ளார். ஆனால் அவர்களை விடுதலை செய்யுமாறு சர்வதேச அமைப்புகள் கேட்டுள்ளன. அவர்களைப் பொறுப்பேற்க சில நாடுகள் முன்வந்துள்ளன.

பதில்: நங்கள் அவர்களை வைத்திருப்பது அவர்களின் பாதுகாப்புக்காகவே பெரும்பாலான மக்கள் ஜே.வி.பி. யினரால் பல கஷ்ரங்களை அனுபவித்தவர்கள். அரசு இவர்களை பாதுகப்பது சரியென்று நாங்கள் நினைக்கின்றோம். இவர்களுக்கு தேவையான சகலவற்றையும் கொடுக்கின்றோம். அவர்கள்

வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கேட்பது விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்பதாகும். இன்னும் இவர்களை எந்தக் காரணமும் இன்றி சிறைச்சாலைகளில் வைத்துள்ளீர்களே?

பதில்: விஜேவீராவின் பிரச்சினை ஏனையவர் பிரச்சினையிலிருந்து வேறுபட்டதுஏனையவர்கள் பயங்கரவாத நடவடிக்கையுடன் தொடர்புடையவர்கள், அவர்கள் அரசியல் சிறைக்கைதிகள் இல்லைஅவர்கள்பல்வேறு குற்றச்செயல்களை புரிந்தவர்கள் அல்லது அதனுடன் ஏதோ ஒரு விதத்தில் தொடர்புடையவர்கள் சில குற்றத்தை புரிந்தவரின் பேரில கைது செய்யப்பட்டவர்கள். அல்லது தாமாக சரணடைந்தவர்கள்

...கிறது. ஆனால் அதேசமயம் அந்த உழைப்பு சக்திக்கு ஈடான ஊதியம் பெண்களுக்கு கிடைப்பதில்லை. தொழில் துறையில் ஊதியம், சமதொழில் வாய்ப்பு, பதவிஉயர்வு என்ற ரீதியில் பெண்ணினம் மிகமோசமான முறையில் பாரபட்சத்திற்கு ஆளாகிறது.

உடல்ரீதியான உழைப்பு என றாலும் சரி, அறிவு ரீதியான உழைப்பு என்றாலும் சரி, பெண்கள் பாலியல் ரீதியாக ஒடுக்கப்படுகின்றனர். அவர்களின் ஆற்றல், அறிவு, திறமை, உழைப்பு யாவுமே 'பெண்' என்ற அளவுகோலால் அளக்கப்பட்டு நசுக்கப்படுகின்றது. பாலியல் ரீதியாகத் தோன்றியுள்ள இந்த அநீதி ஒழிக்கப்படவேண்டுமானால், பெண்ணின் சமத்துவ உரிமை நிலை நாட்டப்படவேண்டும்.

உழைப்புக்கேற்ற ஊதியம்

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி கோட்டத்தில் இன்று மல்லாவி, விஸ்வமடு ஆகிய பகுதிகளில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஊர்வலம் துணுக்காய் சந்தியில் ஆரம்பமாகி மல்லாவி சந்திவரை நடைபெற உள்ளதுடன் மல்லாவி சந்தியில்அமைந்துள்ள மாவீரர் ஞாபகார்த்த மண்டபத்திற்குஅருகாமையில் அமைந்துள்ள மைதானத்தில் கலை, பண்பாட்டுக் கழகத்தின் நிகழ்ச்சிகளுடன் அனைத்துலக பெண்கள் தினத்தையிட்டு நடாத்தப்பட்ட இலக்கிய ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெற உள்ளது. விசுவமடு மகாவித்தியாலயத்திலும் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [167]

## பரீட்சை முடிவுகள் ஏப்பிரலில் வரும்

[கொழும்பு]

கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையினதும், கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையினதும் பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்பிரல் நடுப்பகுதிக்குமுன் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல கூறியுள்ளார்.

## கிழக்கில் ஜூன் மாதத்திற்குள் புலிகளை ஒடுக்க உத்தரவு

[கொழும்பு]

எதிர்வரும் ஜூன் மாதத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு வசதியாக கிழக்கு மாகாணத்தில் புலிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி இராணுவத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திட்டமிட்டபடி ஜூன்மாதத்தில் மாகாணசபைத் தேர்தல் நடத்த அரசாங்கம் உறுதி பூண்டிருப்பதாகவும் தேர்தல் திணைக்களம் முன்னோடி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆலங்கேணி, கிளாலியில் தொடர்ந்து ஷெல் வீச்சு

(கிளாலி)

கிளாலி இறங்குதுறையை நோக்கியும் ஆலங்கேணி பகுதிகளை நோக்கியும் ஆனையிறவு பூநகரி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு வேளையில் எறிகணை தாக்குதல் நடாத்தப்பட்டது. இதேவேளை நேற்று காலையில் இருந்து இடையிடையே எறிகணை தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரியவருகின்றது. பிற்பகல் 7 மணியில் இருந்து கடல் ஏரிப்பகுதியில்வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. (86)

துரை கேட்டுள்ளார்.

## சந்திக்க வேண்டுகோள்

ஊாகாவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மக்களை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு உலர்உணவு அட்டைகளுடன் தத்தமது கிராம சேவை அலுவலர்களைச் சந்திக்குமாறு நாவற்குழி லவனிதா குடியிருப்பில்அறிவித்தல்விடுக்கப்பட்டுள்ளது. [22]

## தமிழீழப்

பெண் மீது பதித்து விட்ட படிமங்களும் பார்வைகளும் ஆண்-பெண் சமத்துவத்திற்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன.

மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்கு பொதுவானது. இந்த மனிதத்தின் ஆற்றல்களை உடற்கூறு நிர்ணயிப்பதல்ல.

பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக்க முடியாது. எதையும் பெண்ணால் சாதித்துவிடமுடியும் என்பதற்கு எமது போராட்டம் ஓர் உன்னத உதாரணமாகத் திகழ்கிறது.

பாலியல் வேறுபாட்டிற்குப் புறம்பாக, ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பாலான, இந்த மனிதத்தை இனம் கண்டு கௌரவிக்குமாறுபெண்ணினம் ஆணினத்திடம் அன்புக்கரம் நீட்டுகிறது. ஆழமான புரிந்துணர்வுடன் ஆணினம் இந்த அன்புக்கரத்தைப் பற்றிக்கொள்ளும் பொழுதுதான் ஆண்-பெண் சமத்துவம் சாத்தியமாகும்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு இன்று நடத்தும் தமிழீழப் பெண்கள் எழுச்சி வைபவத்திற்கு எனது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

கேள்வி: றோகண விஜேவீராவின் மனைவி தற்போதும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவரின் பிள்ளைகளுடன் இராணுவ முகாம் ஒன்றில் அவர் உள்ளார். ஆனால் அவர்களை விடுதலை செய்யுமாறு சர்வதேச அமைப்புகள் கேட்டுள்ளன. அவர்களைப் பொறுப்பேற்க சில நாடுகள் முன்வந்துள்ளன.

பதில்: நங்கள் அவர்களை வைத்திருப்பது அவர்களின் பாதுகாப்புக்காகவே பெரும்பாலான மக்கள் ஜே. வி. பி. யினரால் பல கஷ்ரங்களை அனுபவித்தவர்கள். அரசு இவர்களை பாதுகப்பது சரியென்று நாங்கள் நினைக்கின்றோம். இவர்களுக்கு தேவையான சகலவற்றையும் கொடுக்கின்றோம். அவர்கள் மிகுந்த சந்தோஷமாக உள்ளனர் இவர்களுக்கு எதுவும் நடந்தால் அரசாங்கத்தையே குறை கூறுவார்கள். எனவே தான் அவர்களை எங்கள் பாதுகாப்பில் வைத்துள்ளோம்.

கேள்வி: ஏனைய சிறைக் கைதிகளை வைத்திருப்பதற்கும் இதுவா காரணம?உண்மையாக எந்தவிசாரணையும் இன்றிபலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கேட்பது விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்பதாகும். இன்னும் இவர்களை எந்தக் காரணமும் இன்றி சிறைச்சாலைகளில் வைத்துள்ளீர்களே?

பதில்: விஜேவீராவின் பிரச்சினை ஏனையவர் பிரச்சினையிலிருந்து வேறுபட்டதுஏனையவர்கள் பயங்கரவாத நடவடிக்கையுடன் தொடர்புடையவர்கள், அவர்கள் அரசியல் சிறைக்கைதிகள் இல்லைஅவர்கள்பல்வேறு குற்றச்செயல்களை புரிந்தவர்கள் அல்லது அதனுடன் ஏதோ ஒரு விதத்தில் தொடர்புடையவர்கள் சில குற்றத்தை புரிந்தவரின் பேரில கைது செய்யப்பட்டவர்கள். அல்லது தாமாக சரணடைந்தவர்கள் அவர்களுக்கு விடுதலை நீதி மன்றததீர்ப்பிலேயே தங்கியுள்ளது சிலரின் வழக்குகள் நீதி மன்றத்தில் உள்ளது. நீதி மன்றம் பலருக்கு தீர்ப்பு அளித்தும உள்ளது. அரசாங்கம் இந்த தீர்ப்புக்கு தலை வணங்க வேண்டும். சிலருக்கு நீதி மன்றத்தின் தீர்வின பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டது. இதனால் இவர்கள் சாதாரண வாழ்வு வாழ்கின்றார்கள்.

## றோகணாவின் கொலை விசாரணைக் கமிசன் எங்கே?

கேள்வி: 1989-11-14ஜே.வி பி. தலைவர் றோகண விஜேவீரவும் ஜே. வி. பி. பிரதான செயலாளர் உபதிஸ்ச கமநாயகாவும் உங்கள் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட பின்னர் அடுத்த நாள் இக்கொலை தொடர்பாக கமிஷன் ஒன்றை அமைப்பதாக செய்தி வெளியிட்டீர்கள், அந்த கமிஷன் எங்கே? நீங்களும் அதில் சாட்சிகாரராக இருக்கிறீர்களா?

பதில்: கமிஷன் அமைத்தோம். ஜே. வி. பி. ஒரு பயங்கரவாத அமைப்பு என்று உங்களுக்குதெரியாதா? அவர்சள் பயங்கரவாதத்தால் அரசை பிடிப்பதற்கு முயன்றார்கள். இருந்தாலும் இன்னமும் அவர்கள் அந்த நடவடிக்கையிலேயே இருப்பதாக நான் நினைக்கிறேன். இதற்கு நான் கூறவிரும்புவது நான் ஜனாதிபதியான பின்பு அவர்களை நேரடியாக பேச்சுக்கு அழைத்தேன். றோகண விஜேவீரவுக்கும் அவரின் தோழர்களுக்கும் அவர்களின் எதிர்பார்ப்புகளை தெரிவிக்குமாறு கூறினேன். ஆனால் அவர்கள் எங்களுக்கு என்ன செய்தார்கள்?

அவர்கள் தமது பயங்கரவாதத்தை அதிகரிக்கச் செய்தார்கள். அவர்கள் நாட்டில் எல்லா இடமும் கொலைகளைச் செய்தார்கள். அதேபோல் மதத் தலைவர்களையும் கொலை செய்தார்கள். நாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதம் அடைந்தது. பொதுமக்கள் பெருமளவு கொலை செய்யப்பட்டனர். இவர்களால் பல மக்கள் துன்பம் அடைந்தனர். எமது கட்சியைச் சேர்ந்தவர்கள் 6000 பேர் அளவில் படுகொலை செய்யப்பட்டனர். பௌத்த மத குருக்கள் மற்றும் ஏனைய மத குருக்களையும் கொலை செய்தனர்.

கல்வி மான்களை கொலை செய்தனர். அவர்கள் துப்பாக்கிக் குண்டினால் அரசை அமைக்க முயன்றனர். அவர்களுக்கு வாக்குப் பெறுவது தொடர்பாக நம்பிக்கை இருக்கவில்லை தேர்தல்மூலம் அவர்களுக்கு அரசை அமைக்க முடியாது என்பதை தெரிந்து கொண்டார்கள். அதனாலேயே துப்பாக்கிக்குண்டு மூலம் அரசை அமைக்க முயன்றார்கள்.

## பென் ஜோன்சனுக்கு தடைவிதிப்பு

ஓட்டப் பந்தைய வீரரான பென் ஜோன்சன் தமது வாழ்நாளில் எந்தப் பந்தயத்திலும் கலந்து கொள்ளக் கூடாது என்று தடைவிதிக்கப் பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### துரைச்சாமி செல்லம்மா

நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைச்சாமி செல்லம்மா 7-3-1993 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற துரைச்சாமியின் அன்பு மனைவியும், கனகம்மா, சிவபாக்கியம், தியாகராஜா, பஞ்சாட்சரம் - சரஸ்வதி, சிவமணி, மயில்வாகனம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
து. தியாகராஜா
(மகள்)

(4418)

### வைரமுத்து கதிரவேலு

[றோகினி ரான்ஸ்போட் - தாவடி]

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து - கதிரவேலு தாவடியில் காலமானார். இவர் லட்சுமியின் அன்புக் கணவரும், சிவபாதம், காலஞ் சென்ற தேவராசா, லங்கநாயகம் (றோகினி ரான்ஸ்போட்), தங்கராசா, நவரட்ணம் (சுவிஸ்), சந்திரலீலா, பிறேமாதேவி, புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினிதேவி, கமலாம்பிகை, கௌசலா, கருணாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜயதீபன், திலிபன், கஜயரூபன், தேவதர்சினி, சிறிறஜீதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (8-3-93) காலை 10-00 மணியளவில் தாவடியில் உள்ள இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

றோகினி ராசன்,
தாவடி.

(4420)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 07-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8546

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்.

28-3029, 28-8037, 42-4126, 26-2737 42-7975, 42-1325, 26-3893, 27-1292, 42-3945, 42-3329, 42-0488, 28-0657, 41-8292, 22-4473.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-7217, 42-0704, 26-5850, 27-2854, 41-3931, 26-8052, 40-4760, 24-2024, 24-5734, 42-3964, 24-7672, 41-4194, 42-3726, 26-6933, 41-9995, 27-7281, 40-7207, 27-7717, 24-4957.

மீண்டும்
நியூ யாழ்சைனீஸ்
சைனீஸ் உணவு வகைகளுக்கு
124, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(4417)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.